அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :110/2017

தேதி : 09/10/2017

## ஹஜ் புனித யாத்திரை மானியம் ரத்துசெய்யக்கூடாது

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அவர்கள் வலியுறுத்தல்.

ஆண்டுதோறும் இஸ்லாமியர்கள் ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்வதற்கு மானியம் வழங்கப்படுவதை மத்திய அரசு படிப்படியாக நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளது. இஸ்லாமியர்களின் ஐந்து கடமைகளில் ஒன்று என்றவகையில் மேற்கொள்ளப்படும் இப்புனித யாத்திரைக்கு, பெரும்பாலும் இஸ்லாமிய சமூகத்தின் ஏழை எளிய நடுத்தர மக்களுக்கே மானியம் கிடைத்துவருகிறது. அத்தகைய மக்கள் இம்மானியம் கிடைக்காத நிலையில் அவர்களது ஹஜ் பயணம் வெறும் கனவாகவே போய்விடும். இம்மானியத்தை நிறுத்துவதால் மீதமாகும் தொகையைக் கொண்டு, இஸ்லாமியர்களுக்கு கல்வி உள்ளிட்ட நலப்பணிகளுக்கு செலவிடப்படும் என்று சொல்லியிருப்பது மக்களை சமாதானப்படுத்துகின்ற நோக்கமாகவே கருதுகிறேன்.

மேற்சொன்ன திட்டங்களை நிறைவேற்ற கூடுதல் நிதி ஒதுக்கவேண்டுமே தவிர ஒரு திட்டத்தை நிறுத்திவைத்து நிறைவேற்றுதல் என்பது ஏற்புடையதாகாது. மேலும், ஹஜ் பயண மானியத்தை நிறுத்துவது பாஜகவின் மதவிரோதப் போக்கை உறுதி செய்வதாக அமைந்துவிடும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். எனவே ஹஜ் புனித யாத்திரை மானியத்தை நிறுத்தும் முயற்சியை மத்திய அரசு கைவிடவேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com